# நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை இரு பகுதிகளைக் கொண்டதாகும்.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை.

## பகுதி 1

## நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 282 | நீர்ப்பாசனம் திணைக்களம் |

### 2. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3. கணக்குகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய ஒரு ஒதுக்கீட்டுக் கணக்கு 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்வரும் ஒரு கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| அமைச்சு | ஒதுக்கீட்டுக் கணக்கு | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு | 152 | 2011 ஏப்ரல் 08 |

## (ஆ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 15,332,126,754 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 11,575,191,913 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் திணைக்களங்களினதும் தேறிய சேமிப்பு ரூபா 3,756,934,841 தொகையால் அதாவது மொத்த தேறிய ஏற்பாட்டின் 25% ஆல் ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு /திணைக்களம் | தேறிய ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் | மீண்டெழுபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 152 | நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு | 1987,235,000 | 7,415,101,754 | 1,908,209,244 | 4,956,328,058 | 79,025,756 | 2,458,773,696 |
| 282 | நீர்ப்பாசனத் திணைக்களங்களம் | 1,206,590,000 | 4,723,200,000 | 1,126,493,497 | 3,584,161,114 | 80,096,503 | 1,139,038,886 |
| | மொத்தம் | **3,193,825,000** | **12,138,301,754** | **3,034,702,741** | **8,540,489,172** | **159,122,259** | **3,597,812,582** |

## (இ) பாதீட்டு துணைச் சேவைகள் அவசர தேவைப்பாட்டுப் பொறுப்புகளின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகள்

தலைப்பு - 152- நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்ட மூலதனச் செலவினத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 7,301,754 தொகை பெறப்பட்டிருந்தது.

## (ஈ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சு/ திணைக்களத்திற்கு பின்வருமாறு ரூபா 616,771,443 தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

### (i) நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

| ஏற்பாடுகள் வழங்கப்பட்ட திணைக்களம் | வழங்கப்பட்ட ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு (2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு) | சேமிப்பு தொடர்பான அவதானிப்புகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தேசிய பாதீட்டுத் திணைக்களம் | 7,301,754 | - | 7,301,754 | குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |

### (ii) நிர்ப்பாசனத் திணைக்களம்

| ஏற்பாடுகள் வழங்கப்பட்ட அமைச்சு/ திணைக்களம்/மாவட்ட செயலகம் | வழங்கப்பட்ட ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு (2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு) | சேமிப்பு தொடர்பான அவதானிப்புகள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மாவட்ட செயலகம் குருனாகல் | 427,357,755 | 386,489,880 | 40,867,875 | காணிச் சுவீகரிப்பிற்காக இழப்பீட்டினைச் செலுத்துகையில் ஏற்பட்ட சட்டரீதியான தேவைப் பாட்டின் காரணமாக ஏற்பட்ட சேமிப்பு |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2,500,000 | 1,500,000 | 1,000,000 | உள்ளபடியான செலவினத்தை மேற்கொள்கையில் ஏற்பட்ட சேமிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அமைச்சு | 19,470,183 | 10,620,750 | 8,849,433 | 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்காக உள்ளபடியான செலவினத்தை மேற்கொண்டதன் பின்னரான சேமிப் |
| வனசீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு (வெஹெரகல) | 21,800,000 | 13,873,120 | 7,926,880 | சீரற்ற காலநிலை காரணமாக விடுதி நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட முடியாமையால் சேமிக்கப்பட்ட காசும் டபிள் கப் வண்டிகள் இரண்டும் கொள்வனவு செய்யப்படுகையில் சேமிக்கப்பட்ட காசின் கூட்டுத்தொகை |
| மாவட்ட செயலகம் அம்பாறை | 187,200 | இல்லை | 187,200 | காணிகளைச் சுவீகரிப்பதற்கான இழப்பீட்டினைச் செலுத்துகையில் ஏற்பட்ட சட்ட ரீதியான தேவைப்பாடு காரணமாக ஏற்பட்ட சேமிப்புகள் |
| வன பாதுகாப்பு அமைச்சு | 4,346,000 | 2,828,283 | 1,517,717 | 2010 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டிற்காக உள்ளபடியான செலவினத்தை மேற்கொண்டதன் பின்னரான சேமிப்புகள். |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 1,500,000 | 1,262,000 | 238,000 | உள்ளபடியான செலவினத்தை மேற்கொள்கையில் சேமிப்புகள் |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை | 99,000,000 | 99,000,000 | - | சேமிப்புகள் இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| மாவட்ட செயலகம் மாத்தளை (வேமடில்ல) | 7,008,000 | 6,540,550 | 467,450 | இழப்பீடு செலுத்த இருந்த இழப்பீடு பெறுபவர் இறந்திருந்ததுடன் உரித்தாளர்களை தீர்மானிப்பது சிக்கலாக இருந்தமையால் செலுத்த முடியாதிருந்தது. |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 500,000 | 210,000 | 290,000 | நிர்வாக செலவின சேமிப்பு |
| மாவட்ட செயலகம் ஹம்பாந்தோட்டை | 24,700,000 | 24,591,339 | 108,661 | நிர்வாக செலவின சேமிப்பு |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 397,261 | 397,261 | - | சேமிப்புகள் இல்லை |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 703,290 | 703,290 | - | சேமிப்புகள் இல்லை |
| | **609,469,689** | **548,016,473** | **61,453,216** | |

## 3.2 முற்பணக் கணக்குகள்

### 3.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான 02 முற்பணக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆம் திகதி அளவில் உள்ளவாறு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எல்லைகளுடன் இணங்குதல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

## 3.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 3.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தில் 2010 திசெம்பர் 31 வரை கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 7,344,265 தொகையான வரவு மீதி காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| அமைச்சு / திணைக்களம் | 1 ஆண்டிற்குக் குறைந்த வரவு |
|---|---|
| | ரூபா |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 6,920,932 |
| நீர்ப்பாசன திணைக்களம் | 423,333 |
| | **7,344,265** |

### 3.3.2 பொது வைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 01 திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 362,675,922 ஆக இருந்ததுடன் அது தொடர்பான காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

# பகுதி II

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 152 – நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 செப்தெம்பர் 12 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும்

நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நீர்ப்பாசன மற்றும் நீரியல் வள முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் 2011 மார்ச் 31 வரை பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

| தலைப்பு | கணக்கின் பெயர் |
|---|---|
| 152 | ஒதுக்கீட்டுக் கணக்கு |

### (ஆ) பாதீட்டு முரண்

(i) தலைப்பு 152 இன் கீழ் 02 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 194,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் எஞ்சியிருந்தது.

(ii) 20 செலவினத் தலைப்புகளுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் 25% இற்கும் 88% இற்கும் இடையிலான வீச்சுடைய சதவீதத்தைக் கொண்டிருந்தது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

2011 ஏப்ரல் 30 அளவில் நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் தீர்க்கப்பட்டிராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,920,932 ஆகும்.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 56,805,254 ஆனதுடன் அம் மீதியில் நிதிப்பிரமாணம் 571 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது 2 வருட கால எல்லைக்கு மேலாக நிலவிய வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,582,166 ஆகும்.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

15201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,548,735 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

## 1.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

**ஏனைய நிறுவனங்களின் சொத்துக்களை முறையற்றவிதத்தில் பயன்படுத்தப்படுதல்**

ஏனைய நிறுவனங்களிடம் காணப்பட்ட சொத்துக்கள் முறையற்றவிதத்தில் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 10 நிறுவனத்தின் 31 வாகனங்கள் அவ்வாறு பயன்படுத்தப்படுவதாக தெரிவு கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

| சொத்துக்களின் வகை | சொத்துக்களுக்குச் சொந்தமான நிறுவகங்கள் | எண்ணிக்கை | பெறுமதி | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| வாகனங்கள் | இலங்கை மஹாவலி அதிகாரசபை | 11 | விபரத்தைப் பெற முடியவில்லை | விபரத்தைப் பெற முடியவில்லை |
| | சுகாதார அமைச்சு | 02 | மேற்படி | மேற்படி |
| | தேசத்தைக் கட்டியெழுப்புதல் அமைச்சு | 02 | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| துறைமுக அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு அமைச்சு | 01 | மேற்படி | மேற்படி |
| நீர்ப்பாசன திணைக்களம் | 10 | மேற்படி | மேற்படி |
| நீர் வளங்கள் செயலகம் | 01 | மேற்படி | மேற்படி |
| வழங்கல் மற்றும் மதியுரைப் பணியகம் | 01 | மேற்படி | மேற்படி |
| இலங்கை மின்சார சபை | 01 | மேற்படி | மேற்படி |
| ஊழல் மற்றும் மோசடி விசாரணைப் பணியகம் | 01 | மேற்படி | மேற்படி |
| பொது முயற்சிகளை மக்கள் மயமாக்கல் திணைக்களம் | 01 | மேற்படி | மேற்படி |

## 1.5 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 12 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 02 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 41 | 26 | 15 |
| (iv) | ஆரம்ப நிலை | 42 | 19 | 23 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 06 | - |
| | மொத்தம் | **109** | **65** | **50** |

## 1.6 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) பதிவேடுகளைப் பேணல்

அமைச்சினால் நி.பி. 110 இன் பிரகாரம் இழப்புகள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) உள்ளகக் கணக்காய்வு

நி.பி. 133 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (இ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு செயற்படுத்தப்படுதல்

அமைச்சினால் 2010 ஆம் ஆண்டிற்காக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுவின் ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 செப்தெம்பர் 13 ஆம் திகதி நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்க கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணி வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிப்பதற்குரியவகையில் உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

04 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 30,100,000 தொகையான தேறிய ஏற்பாடு முழுவதும் எஞ்சியிருந்தது.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கின் மீதிக்கும் திறைசேரிக் கணனி அச்சீட்டுப் பிரதிகளின் படியான மீதிக்கும் இடையே ரூபா 2,137,142 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் 2011 செப்தெம்பர் வரை அவ் வேறுபாடு சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

28201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றில் 2010 திசெம்பர் 31 அளவில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,563,620 ஆகக் காணப்பட்டதுடன் அந் நிலுவை மீதியினை அறவிடப்படுவதின் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 756 இன் ஏற்பாடுகள் மற்றும் 2010 திசெம்பர் 17 ஆம் திகதிய PF/FS/Board of survey/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடித அறிவுறுத்தல்களின் பிரகாரம் திணைக்களத்தினால் 2010 ஆம் ஆண்டிற்காக 41 நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயங்களிலும் 11 வலய அலுவலகங்களிலும் மற்றும் தலைமை அலுவலகத்திலும் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2010 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாகவும் வேறு பரிந்துரைகள் தொடர்பாகவும் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 39,239,329 ஆனதுடன் இது ஒரு வருடத்திற்குக் குறைவான மீதியைக் கொண்டிருந்தது.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட திணைக்களத்தின் உத்தியோகபூர்வ விடுதி**

திணைக்களத்தின் புதிய, மாடி வீட்டுச் செயற்திட்டத்தில் 04 வீடுகள் திணைக்களத்தினால் வெளி நிறுவக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தன.

## 2.5 இணங்காமைகள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) **தாபனவிதிக்கோவை** | |
| xix ஆம் அத்தியாயம் 6.1 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ விடுதிகளின் குத்தகைக் காலம் 5 ஆண்டுகளான போதிலும் இரத்மலானை வீட்டுத்தொகுதியில் குடியிருக்கும் சில வீட்டு உரிமையாளர்கள் 30 ஆண்டுகள் அளவில் தொடர்ச்சியாக அவ்வீடுகளில் குடியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. |
| (ii) நிதிப் பிரமாணம் | |
| நி.பி.104(3) மற்றும் 104(4) | வாகன விபத்து ஏற்பட்டு பல வருட காலம் கடந்திருந்த போதிலும் உரிய நட்டங்கள் இழப்புகள் அறிக்கை உரிய முறையில் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை**

திணைக்களத்தின் இரண்டு கட்டிடங்களிற்கு 2007 ஆம் ஆண்டு முதல் ரூபா 763,225 வீத வரி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 செயற்திட்டங்களை அமுலாக்குவதின் நலிவுகள்

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ஆண்டு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | |
| கிரம்புல்வேகே அணைக்கட்டை மீள நிர்மாணித்தல் | 40 | 1998 | 2008 | 10.4 | மாற்று யோசனைகள் கருத்திற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| ஹேகித்த வெள்ளக் கட்டுப்பாடு | 47 | 2005 | 2009 | 27.1 | ஒப்பந்தக்காரரின் தாமதங்கள் |
| லுணுகம் வெஹெர திட்டம் | 90 | 2007 | 2009 | 11.9 | உள்ளீட்டு செயற்திட்டங்கள் என்பதனால் வேலையினை மட்டுப்படுத்தல். |

## 2.7 செயலாற்றல்

(அ) போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத பிரதான பணிகள்

திணைக்களத்தினால் சில பிரதான பணிகள் மேற்கொள்ளப்படாத அல்லது போதியளவில் மேற்கொள்ளப்பட்டிராத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் அத்தகைய சந்தர்ப்பங்களில் சில பின்வருமாறாகும்.

(i) 2005 ஆம் ஆண்டின் போது ரூபா 42 மில்லியன் தொகையான மதிப்பீட்டின் பிரகாரம் திணைக்களத்தினால் ஹெட்டிகே கால்வாய்ச் செயற்திட்டம் 04 ஆண்டுகளில் பூர்த்திசெய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் கடுவல மற்றும் ஹோமாகம பிரதேச செயலாளர் அதிகார பிரதேசத்திலுள்ள ஏறக்குறைய 2,000 விவசாயக் குடும்பங்கள் 2,400 ஏக்கர் வயல் காணிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவது குறிக்கோளாகக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,472,108 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) ரம்புக்கன ஓயா செயற்திட்டத்தின் பிரதான கால்வாய் மற்றும் விநியோக கால்வாய்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 499.6 மில்லியன் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டிற்காக ரூபா 3 மில்லியன் தொகையும் 2010 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் வரை ரூபா 10 மில்லியனும் செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், செயற்திட்டம் திட்டமிட்ட நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தை அடைந்திருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.8 வங்கிக் கணக்குகளை பேணுதலிலான குறைபாடுகள்

திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பான காலப்பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|
| | 6 மாதங்களுக்கு மேற்பட்ட 1 ஆண்டிற்குக் குறைவான | 1 ஆண்டிற்கு மேலான 3 ஆண்டுகளுக்கு குறைவான | |
| வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காகச் சமாப்பிக்கப்பட்டிராத காசோலைகள் | 228,179 | 399,782 | 627,961 |

## 2.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

திணைக்களத்தினால் 2009 நவம்பர் மாதத்தின் போது 10 குளிரூட்டி இயந்திரங்கள் ரூபா 2,753,100 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 5 இயந்திரங்கள் உடன்பட்ட மாதிரிகளுக்கு இணங்கியிராமையும் 2 இயந்திரங்கள் 2010 நவம்பர் மாதமளவில் செயற்படாதிருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.10 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

திணைக்களத்தின் ஒரு கடபிலர் க்ரோலர் டிராக்டர் இயந்திரம் அம்பாறை இயந்திர வேலைத்தலத்தில் பழுதுபார்க்கப்பட்டு 2010 பெப்ரவரி 06 ஆம் திகதி ரம்புக்கன் ஓயா வேலைத்தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு 2 மணித்தியாலங்கள் செயற்பட்டதன் பின்னர் செயற்படாது மீள பழுதுபார்ப்பிற்காக நிறுத்தி வைக்கப்படுவதற்கு நேர்ந்திருந்தது. அம்பாறை இயந்திரப் பொறியியலாளரினால் இந்த இயந்திரத்திற்காக மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல் செலவினம் கணக்காய்வினால் கோரப்பட்டிருந்த போதிலும் 2010 நவம்பர் மாதம் வரை அத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

2007 பெப்ரவரி 28 ஆம் திகதிய 07/0326/356/006 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் தீர்மானத்தின் பிரகாரம் ரம்புக்கன் ஓயா செயற்திட்டத்திற்கு அவசியமான 2 குரோ டிராக்டர், 5 கொங்கிரீட் கலவைகள் 01 எயார் கொம்பிரேஷர் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2010 யூலை 31

வரை இந்த இயந்திரங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தேவைப்பாடு தொடர்பான முறையான ஆய்வு செய்யப்படாமையினாலேயே 2 குரோ டிராக்டர் மற்றும் 5 கொங்கிரீட் கலவைகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது என நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் விளக்கத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

## 2.12 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 324 | 269 | 55 |
| (ii) | மூன்றாம் நிலை | 147 | 34 | 113 |
| (iii) | இரண்டாம் நிலை | 2,432 | 1,362 | 1,070 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,823 | 1,516 | 307 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 415 | - |
| | மொத்தம் | **4,726** | **3,596** | **1,545** |